තාක්ෂණ අමාත්‍යාංශය தொழில்நுட்ப அமைச்சு MINISTRY OF TECHNOLOGY

පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
DEPARTMENT FOR REGISTRATION OF PERSONS

10 වන මහල, සුහුරුපාය, ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල.
10 ஆம் மாடி,சுஹுருபாய, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.
10th Floor, Suhurupaya, Sri Subhuthipura rd, Battaramulla.

මගේ අංකය / எனது இல. / My Ref. } පු.ලි.දෙ./ මෙ/ මාධ්‍ය ඒකකය/ මාධ්‍ය නිවේදන හා දැන්වීම්

ඔබේ අංකය / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2021.09.29

"විශ්වසනීය පුද්ගල අනන්‍යතාව හැඳුනුම්පතයි" "அடையாள அட்டை - நம்பகத்தன்மையான தனிநபர் அடையாளம்" "Identity Card, the Trusted Personal Identity"

# பொதுமக்களுக்கான மற்றுமொரு அறிவித்தல்

## ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களத்தின் பொதுமக்களுக்கான சேவைகளை மீண்டும் ஆரம்பித்தல்

கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு எதிர்வரும் 2021.10.01ம் திகதியிலிருந்து நீக்குவதற்கு முடிவு செய்யப்பட் டுள்ளதனால்,சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் வகுத்த வழிகாட்டுதல்க ளுக்கு அமைவாக எதிர்வரும் 04.04.2021 திங்கட்கிழமை முதல் ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாகாண அலுவலகங்களின் பொதுமக்களுக்கான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது

எவ்வாறாயினும், தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் ஒரு நாள் சேவை நடைபெறமாட்டது என்பதை தயவுசெய்துதெரிவித்துக் கொள்கின்றோம்.தேசிய அடையாள அட்டைகள் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கிராம அலுவலரினால் சான்சான்றுப்படுத்தப்பட்ட பின்னர் , சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தில் நிறுவப்பட்ட ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களத்தின் கிளைப்பிரிவில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குறித்த விண்ணப்பப்படிவத்திற்கான தேசிய அடையாள அட்டை விரைவாக தயாரிக்கப்பட்டு பதிவுத்தபால் மூலம் உரிய விண்ணப்பதாரரின் முகவரிக்கு விரைவாக அனுப்பி வைக்கப்படும்.

மேற்கண்டவாறு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு அல்லது முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு அவசர தேவையின் பொருட்டு தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்கள் , ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அல்லது காலியிலுள்ள மாகாண அலுவலகத்திற்கு வருகை தருவதாயின் வாரத்தின் வேலை நாட்களில் பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களத்தின் கிளைப்பிரிவில் அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கங்களின் மூலம் தொடர்பு கொண்டு வருகை தருவதற்கான திகதி மற்றும் நேரத்தை அவசியம் முன்பதிவு செய்துவருகை தர வேண்டும் , என்பதை தயவுடன் உங்களுக்கு அறிவித்து கொள்கிறேன்

- பத்தரமுல்லைதலைமை அலுவலகம் - 0115226126/0115226100
- தென் மாகாண அலுவலகம் - 0912228348
- வடமேல் மாகாண அலுவலகம் - 0372224337
- கிழக்கு மாகாண அலுவலகம் - 0652229449
- வடக்கு மாகாண அலுவலகம் - 0242227201

**கையெழுத்திட்டது ; பீ.வியானி குணதிலக**

ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம்

දුරකථන / தொலைபேசி / Telephone } (011) 5226100
ෆැක්ස් / பெக்ஸ் / Fax } (011) 2862198
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail } info@drp.lk
වෙබ් / இணையதளம் / Web } www.drp.gov.lk